ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1878/3 - 2014 සැප්තැම්බර් මස 01 වැනි සඳුදා - 2014.09.01

*1878/3 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் உறுப்புரை 44 (2) உடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் மூலம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2012, ஒற்றோபர் 04 ஆந் திகதிய 1778/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் மேற்படி பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டதுமான கட்டளையின் மூலம் கடைசியாக திருத்தப்பட்டவாறான, (2006, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/ 20 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளையினை அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டவாறு திருத்துவதற்காக இக்கட்டளையினை வழங்குகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, செத்தெம்பர் 01.

அட்டவணை

1. பின்வருவனவற்றிற்கு மீள் இலக்கமிடுவதன் மூலம் :
   (i) விடயம் 29 ஆக, 2012, ஏப்பிறல் 04 ஆந் திகதிய 1752/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விடயம் 27 ;
   (ii) விடயம் 30 ஆக, 2012, மே 09 ஆந் திகதிய 1757/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விடயம் 28 ;
   (iii) விடயம் 31 ஆக, 2012, ஒற்றோபர் 04 ஆந்திகதிய 1778/ 32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 29 ஆவது விடயம் ;
2. மீள் இலக்கமிடப்பட்ட விடயம் இலக்கம் 31 இற்கு உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்த்தல் :

   "32 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் (திருத்த) சட்டத்தின் ஒழுங்குவிதியின் 53 ஆவது பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, காப்புறுதிக் கம்பனியொன்று நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் என இரண்டு தனியான கம்பனிகளாக வேறாக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தொடர்புடைய புதிய கம்பனிகளின் கீழ், தற்போதிருக்கும் பங்குகளுக்குப் பதிலாக அதன் பங்குதாரர்களுக்கு ஏதேனும் பங்கு வழங்கல் மீதான பங்குச் சான்றிதழ் ஏற்கனவேயுள்ள பங்குகளின் எண்ணிக்கையின் பெறுமதியினை விஞ்சியதாக அமையக் கூடாது."

10- 643



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.